vicroads

SEPTEMBER 2008

# புதிய வாகனம் ஓட்டும் பரீட்சைக்கு நீங்கள் தயாரா?

புதிய விக்ரோரிய சாரதி பரீட்சை, பயிலும் சாரதிகளிடம் எதிர்பார்க்கப்படும் வாகனம் செலுத்தும் பழக்கங்களை மதிப்பீடு செய்யும் வண்ணம் உருவாக்கப்பட்டது. இந்தப் பயிலும் சாரதிகள் பல வகையான வாகனம் செலுத்தும் நிலைகளில் சிறிது சிறிதாக சேகரிக்கப்பட்ட ஆகக் குறைந்தது 120 மணித்தியால வாகனம் ஓட்டும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

இந்தப் புதிய சாரதி பரீட்சையில் சித்தியடையும் வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணபதாரிகள் இந்தப் பரீட்சையில் மதிப்பீடு செய்யப்பட்ட நாளாந்த வாகனம் ஓட்டும் நடவடிக்கைகளின் போது பாதுகாப்பாகவும் சட்டத்தின்படியும் வாகனம் செலுத்த முடியும் என்று காண்பித்தார்கள்.

பின்வரும் சரிபார்ப்பு அட்டவணையிலுள்ள எல்லா விடயங்களையும் உங்களுக்கு குறியீடு செய்ய முடியுமானால் நீங்கள் பரீட்சைக்கு நிற்க ஆயத்தம் என்று கருத்து. இந்த அட்டவணை ஒரு வழிகாட்டி மட்டுமே அனைத்து விவரங்களையும் அடக்கியதல்ல. பாதுகாப்பற்ற வாகனம் செலுத்தும் தவறுகள் மற்றும் சட்டத்திற்கு விரோதமான நடத்தைகள் இந்தப் புதிய பரீட்சையில் கடுமையாக கவனிக்கப்படும். அத்துடன் ஒரு நன்றாக ஆயத்தம் செய்த பயிலுநர் தேவைப்படும் பாதுகாப்பான மற்றும் சட்டத்திற்கு உட்பட்ட நடத்தையை இந்தப் பரீட்சையின்போது செய்து காட்ட முடியாவிட்டால் பரீட்சையில் தோல்வியடைய வேண்டி இருக்கும். **பயிலுநர் பொதியின்** ஒரு பகுதியான விக்ரோரிய தெருக்களின் **பயிலுநர் வழிகாட்டியிலிலுள்ள** எல்லா இலக்குகளையும் நீங்கள் குறியீடு செய்வதையும் உறுதி செய்ய வேண்டும்.

## நீங்கள் புதிய பரீட்சைக்கு நிற்க தயார் என்றால், நீங்கள்:

- ☐ ஆகக் குறைந்தது 120 மணித்தியாலங்கள் வெவ்வேறு போக்குவரத்து, சாலை, மற்றும் வாகனம் செலுத்தும் நிலைகளில் மேற்பார்வை செய்யப்பட்ட வாகனம் ஓட்டும் அனுபவம் பெற்றிருந்தால். இதில் 10 மணித்தியாலங்கள் இரவில் மற்றும் மழை காலத்தில் அல்லது உயர் வேகப் பாதையில் ப+ர்த்தி செய்திருக்க வேண்டும்.
- ☐ உங்களுக்கு நாளாந்த வாகனம் ஓட்டும் கருமங்களை சுறுசுறுப்பான சாலைகள், பல சாலைப் பிரிவுகள் அடங்கிய தெருக்கள், வெவ்வேறு வேக வளையங்கள் மற்றும் வெவ்வேறு போக்குவரத்து நிலைகள் உட்பட்ட வெவ்வேறு சாலைகளில் பாதுகாப்பாக செய்ய முடியுமானால்.
- ☐ உங்களுக்கு உங்களது மேற்பார்வை செய்யும் சாரதி அல்லது ஆசிரியரின் உதவியின்றி நாளாந்த வாகனம் ஓட்டும் கருமங்களை பாதுகாப்பாக செய்ய முடியுமானால். அதாவது உங்களுக்கு சுதந்திரமாக வாகனம் ஓட்டவும் உங்களுக்கு பாதுகாப்பாக வாகனம் செலுத்தும் தீர்மானங்களை சொந்தமாக எடுக்கவும் முடியுமானால்.

## கீழ்வரும் பாதுகாப்பாக வாகனம் ஓட்டும் முறைகளை வெவ்வேறு போக்குவரத்து நிலைகளில் நீங்கள் தவறாமல் காண்பிக்க வேண்டும்:

- ☐ அவதானித்தல்-தெருக்களை உபயோகிக்கும் ஏனையோரை உணர்தல் மற்றும் எல்லா நேரங்களிலும் தெருவின் நிலைகளை உணர்தல். இவற்றை தலையைத் திருப்பி பார்ப்பது மூலமும் கண்ணாடிகளைப் பார்ப்பது மூலமும் செய்யலாம். அத்துடன் உங்களது வண்டிக்கு முன் புறத்தை பார்த்தல் மற்றும் குறைந்த வேகத்தில் வண்டி ஓட்டும் சமயங்களில் உங்களது வண்டிக்கு பின்புறம் நடைபெறுவதை அவதானித்தல்
- ☐ சைகைகளை உபயோகித்தல்-உங்களது உள் நோக்கங்களை தெருக்களை உபயோகிக்கும் ஏனையோருடன் உங்களது சைகைகளை சரியாக உபயோகிப்பதன் மூலம் தொடர்பு கொள்தல்
- ☐ இடைவெளி தெரிவு-போக்குவரத்திற்குள் நீங்கள் நுழையும் போது உங்களது முதல் இடைளியைத் தெரிவு செய்தல்
- ☐ வேகத்தை தெரிவு செய்தல்- நீங்கள் எப்போதும் வேக எல்லைக்குள் வாகனம் ஓட்ட வேண்டும் ஆனால் மிகவும் மெதுவாக அல்ல- அதாவது நீங்கள் போக்குவரத்து மற்றும் தெருவின் நிலைகளுக்கு ஏற்றவாறு ஒரு பாதுகாப்பான திறமைவாய்ந்த வேகத்தை தெரிவு செய்தல்
- ☐ பின் தொடரும் தூரம்-நீங்கள் எப்போதும் உங்களது வண்டிக்கு முன்பாக ஒரு பாதுகாப்பான தூரத்தை வைத்துக் கொள்தல

- [ ] பக்கமாய் ஓட்டும் போது- மிகப் பாதுகாப்பான சாலைப்பிரிவினைத் தேர்ந்தெடுங்கள், பாதையில் வண்டியை இலகுவாய் திருப்புங்கள் மற்றும் உங்களது சாலைப் பிரிவிலேயே ஓட்டுங்கள்
- [ ] நிறுத்தும் நிலை- நீங்கள் நிறுத்தும் சின்னங்கள், போக்குவரத்து விளக்குகள், மற்றும் பாதசாரிகள் கடப்புப் பகுதிகளில் உங்களது வண்டியை முற்றாகவும் சரியாகவும் நிறுத்துதல்
- [ ] ஆளுகை- நீங்கள் எல்லா நேரங்களிலும் வண்டியை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் மற்றும் இலகுவாக செலுத்துதல்

## நீங்கள் வெவ்வேறு போக்குவரத்து நிலைகளில் பின்வரும் செயல்களை பாதுகாப்பாகவும் சட்டரீதியாகவும் மேற் கொள்தல்:

- [ ] வேவ்வேறு குறுக்குசாலைப் பகுதிகளில் வலம் மற்றும் இடப்புறத் திருப்பல்கள்
- [ ] சாலைப் பிரிவு மாற்றங்கள் இடப்பக்கம் மற்றும் வலப் பக்கம்
- [ ] ஏனைய போக்குவரத்துடன் இணைதல்
- [ ] இணைவாய் வண்டியை நிறுத்தல் மற்றும் மும்முறைத் திருப்பல்களில் வண்டியை பின்புறம் நகர்த்தல்
- [ ] வேவ்வேறு போக்குவரத்து நிலைகளின் போது வாகனத்தை நேரான அல்லது வளைந்த தெருக்களில் ஓட்டும் போது

## நீங்கள் வெவ்வேறு போக்குவரத்து அல்லது சாலை நிலைகளின் பின்வரும் ஏதாவது ஒரு கடுமையான பாதுகாப்பு தவறு செய்யாமல் வாகனத்தை ஓட்டினால்:

- [ ] வண்டி ஓட்டும்போது நடைபாதை விளிம்புடன் மோதுதல்
- [ ] மற்ற வாகனங்கள் மீதும் சாலையைப் பயன்படுத்துவோர் மீதும் கிட்டத்தட்ட மோதும் நிலையை ஏற்படுத்தல்
- [ ] எப்போதாவது வேக எல்லைக்கு கூடுதலாக வாகனத்தை செலுத்துதல்
- [ ] சைகை காட்டத் தவறுவதன் மூலமும் கவனமின்மையாலும் வழிதரத் தவறுவதாலும் மற்ற சாலையைப் பயன்படுத்துவோருக்கு மோதலைத் தவிர்க்க முடியாத நிலையை ஏற்படுத்தல்
- [ ] வாகனத்தை நிறுத்தும் சின்னம் அல்லது சிவப்பு நிற விளக்கு ஆகியவற்றை அனுசரியாமல் வாகனத்தை செலுத்துதல்
- [ ] பாதுகாப்பற்ற நிலையில் வண்டியை நிறுத்துதல்
- [ ] நிலைமைகள் சரியாயயிருப்பினும் வண்டியை மிகவும் மெதுவாக ஓட்டுதல்
- [ ] பார்க்கத் தவறுதல் அல்லது சைகை காட்டத் தவறுதல்
- [ ] பாதசாரிக் கடப்புப் பகுதிகளை தடை செய்தல்
- [ ] வாகனத்தை நிறுத்தும் போது அல்லது நிறுத்திய இடத்திலிருந்து வெளியேறும்போது ஒரு சில்லை நடைபாதை விளிம்பின் மேல் ஏறச் செய்தல்
- [ ] நிறுத்தும் சின்னத்தில் வண்டியை முற்றாகவும் சரியாகவும் நிறுத்தத் தவறுதல்

ஒரு கடுமையான பாதுகாப்புத் தவறு ஏற்பட்டால் உடனடியாக பரீட்சை  நிறுத்தப்பட்டு பரீட்சையில் சித்தியடையவில்லை என்று பதியப்படும்

குறிப்பு: இச் சரிபார்ப்பு அட்டவணை அனைத்து விவரங்களையும் அடக்கியதல்ல. புதிய வாகனம் ஓட்டும் பரீட்சை பற்றிய மேலதிகத் தகவலுக்கு **நீங்கள் வாகனம் ஓட்டும் பரீட்சையைப் பற்றி என்ன அறிந்து கொள்ள வேண்டும்** என்ற சிற்றேட்டைப் பார்க்கவும் அத்துடன் புடுளு வலைத் தளத்தில் www.gls.arrivealive.vic.gov.au  ம் பார்க்கவும்.

**பயிலுநர் வழிகாட்டி** மற்றும் **மேற்பார்வை செய்யும் சாரதிகளுக்குரிய வழிகாட்டி** ஆகியவற்றை www.vicroads.vic.gov.au என்ற இணையத் தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

ஏசீஜ02072 9.08